உ

ஸ்ரீ கழுகாசலமூர்த்தி துணை




கழுகுமலை

அருள்மிகு கழுகாசலமூர்த்தி (சுப்பிரமணியசுவாமி) திருக்கோவில்.

தல வரலாறு

திருக்கோவில் நிர்வாகம் வெளியீடு



உ

ஸ்ரீ முருகன் துணை



குதலை மொழியினர் நிதிக்கொள் வாரணி
முலையை விலைசெய்வார் தமக்கு மாமயல்
கொடிது கொடிததால் வருத்த மாயுறு துயராலே

மதலை மறுகிவா லிபத்தி லேவெகு
பதகர் கொடியவா ளிடத்தி லேமிகு
வறுமை புகல்வதே யெனக்கு மோ இனி முடியாதே

முதல வரிவிலோ டெதிர்த்த சூருடல்
மடிய அயிலையே விடுத்த வாகரு
முகிலை யனையதா நிறுத்த மால்திரு மருகோனே

கதலி கமுகுசூழ் வயற்கு ளேயனி
யிசையை முரலமா வறத்தில் மீறிய
கமுகு மலைமகா நகர்க்குள் மேவிய பெருமாளே.

ஓம்

கழுகுமலைத் தல வரலாறு

குன்றுதோறும் குமரக் கடவுள் குடி கொண்டிருக்கும் தலங்கள் பலவற்றுள் மிகச்சிறந்ததாக விளங்குவது தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அருள்மிகு கழுகாசலமூர்த்தி எழுந்தருளியிருக்கும் கழுகுமலையேயாகும். இவ்வூர் கோவில்பட்டிக்கும் சங்கரன் கோவிலுக்கும் இடையில் உள்ள ஒரு சிறந்த முருகத்தலம். இது ஒரு யாத்திரைத் தலமும் ஒரு காணிக்கைத்தலமும்கூட.

இவ்வூரிலிருந்து நான்கு திக்குகளுக்கும் போக்கு வரத்து வசதிகள் உள்ளன. திருநெல்வேலி (கயத்தார் வழி) தென்காசி (சங்கரன்கோவில் வழி) தூத்துக்குடி (கோவில்பட்டி வழி) மதுரை (சிவகாசி வழி) ஆகிய நகரங்களுக்கு நேரடி பேருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளதால் இவ்வூர் ஒரு போக்குவரத்துச் சந்திப்பிடம்போல விளங்குகின்றது. புகை வண்டி மூலமாக வர விரும்புவோர்கள் கோவில்பட்டி வந்து இறங்கி சுமார் 22 கி.மீ. பேருந்து மூலம் கிழக்கே வரவேண்டும். இவ்வூருக்கு அருகாமையில் வானரமுட்டி என்ற ஊர் உள்ளது. இராமர் இவ்வழியில் சென்றபொழுது அவரது படைகளான வானரங்கள் (குரங்குகள்) தங்கிய இடமே இப்பெயரால் அழைக்கப்படுகிறது. சம்பாதி என்ற கழுகு முனிவர் இவ்வூர் முருகனை வழிபட்டதால் இந்த ஊர் கழுகுமலை என்று பெயர் பெற்றது என்று கூறுவர். இங்கு உள்ள மலையின் கற்பாறையை குடைந்து குகைகுள் மூர்த்தி அமைக்கப்பட்டிருப்பதால் இது குடைவரைக்கோவிலாகும். இக்கோவிலுக்கு மலையே விமானமாகத் திகழ்கிறது. குடவரைக் கோவிலானதால் கோவில் பிரகாரம் சுற்றிவர வேண்டுமானால் மலையைச் சுற்றி வர வேண்டும். அதற்கு கிரிவலம் என்று பெயர்.

இம் மலை 300 அடி உயரம் உள்ளது. கருவறையும், அர்த்த மண்டபமும் மலையைக் குடைந்து செதுக்கப்பட்டுள்ளன. கருவறையில் வள்ளி தெய்வானையோடு முருகன் காட்சியளிக்கிறார். மற்ற கோவில்களில் உள்ளது போல் முருகனின் வாகனமான மயில் வலது பக்கத்தில் காணப்படாது. இடது பக்கத்தில் தோற்றம் அளிப்பது ஒரு தனிச் சிறப்பு.

இங்குள்ள மூர்த்திக்கு ஒரு முகமும், ஆறுகரங்களும் தான் உள்ளன. தென் இந்தியாவிலேயே இம்மாதிரியான திருக்கோலம் கொண்ட முருகன் கோவில் காணமுடியாது. தாரகாசூரனை வதம் செய்வதற்காகவே முருகன் இக்கோலத்துடன் காட்சியளிக்கிறார் என்று கூறப்படுகிறது.

இப் புண்ணியத்தலம் மிகப் பழமையானது. கல் வெட்டுக்கள் மூலம் இவ்வூர் கோவில் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என ஆராய்ச்சியாளர்கள் முடிவுகட்டியுள்ளனர்.

மலையின் உச்சியில் பிள்ளையார் கோவிலும், கோவிலுக்குச் செல்லும் வழியில் சமணர் சிலைகளும் அய்யனார் கோவிலும், குகையும், சுனையும் உள்ளன.

வெட்டுவான் கோவில்:

இக்கோவில் பலசிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் வெட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 47 அடி உயரம் 30 அடி மலையைக் குடைந்து அதன் நடுப்பகுதியில் 30 அடி ஆழத்தில் சதுர மாகப் பல வேலைப்பாடுகளுடன் வெட்டப்பட்டுள்ளது. இதில் இரண்டு நிலை விமானம் காணப்பெறுகின்றது இதனை எல்லோராவில் உள்ள கைலாசநாதர் கோவிலுக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம் என்று பலர் கூறுகின்றனர்.

தலம்:

தன்னிடத்தில் பிறந்தாருக்கும் இறந்தாருக்கும் வாழ்ந்தாருக்கும் தன்னை இறை உணர்வோடு கண்டு காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி வாயாரப் புகழ்ந்து மனமார நினைத்து உருகுவார்க்கும் வீட்டின்பகத்தை (முக்தி) அளிக்க இறைவன் எழுந்தருளி இருக்கின்ற சீரிய இடமே தலம் என்பர். முருகன் மேற்கு முகமாக இருக்கும் கருவறையையுடைய மலை சிவஸொருபம் என்று கிழக்கு முகமாக இருக்கும் மலை சக்திஸொருபம் என்றும் வேதாகம் நூல்களில் கூறப்பட்டுள்ளது. கந்தபுராணத்தின் ஆசிரியர் கச்சியப்பர் தாம் அருளிய கந்தபுராணத்தில் குன்று தோராடிய குமரன் மேற்கு முகமாக உள்ள தலங்கள் மூன்று என்றும் அவற்றில் இராஜபோகமாக முருகன் வீற்றிருக்கும் தலம் கழுகுமலை எனக் குறிப்பிட்டுகிறார்.

இது சம்பாதி சண்டாளத்துவம் நீங்கிய தலம்:

இராவணனால் ஜடாயு கொல்லப்பட்டதையும் இராமனால் சகல கருமங்களும் செய்யப்பெற்று ஜடாயு ஜென்மசாபல்யமுற்றார் என்பதையும் அனுமார் மூலம் அறிந்த ஜடாயுவின் சகோதரன் சம்பாதி வழியில் இராமபிரானைத் தரிசித்து வணங்கி நின்று தான் சகோதரனுக்கு ஈமகிரிகைகள் செய்யாத கரும சண்டாளன் ஆகிவிட்டேன் என்றும் அதற்கு ஒரு வழி கூறவேண்டும் என்று வேண்ட இராமன் சம்பாதியை நோக்கி நீ கஜமுக பர்வதத்தில் மயில் மீது அமர்ந்திருக்கும் முருகனை அவ்விடத்திலுள்ள ஆம்பல் நதியில் மூழ்கி பூஜை செய்தால் உன் சண்டாளத் தன்மை நீங்கி மோட்சம் அடைவாய் என்றார்

இராமன் இட்ட கட்டளைப்படி சம்மாதி ஆம்பல் நதியில் தீர்த்தமாடி கழுகாவலமூர்த்தியை பூசித்து சண்டாளத்தன்மை நீங்கினார் என்பது புராண வரலாறு.

இத்தலத்தின் பெயர்கள்:

இத்தலம் கழுகுமலை தென்பழனி கழுகாசலம் உவணகிரி கஜமுகபர்வதம் சம்பாதிஷேத்திரம் என்று பலபெயர்களால் வழங்கப்படும் இத்தலத்தை தென்பழனி என்று புராணங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இதனை தென்பழனி என வழங்க காரணம் வடபழனியைப் போல மேற்கு முகமாக முருகன் சன்னிதானம் இருப்பதினால் என்க.

தீர்த்தம்

தன்னைக்கொண்டு மூர்திகளுக்கு நீராட்டுவாருக்கும் தன்னிடம் நீராடப் பெற்றாருக்கும் வீடுபேற்றை அளிக்கவல்லது தீர்த்தமாகும்.

இவ்வூர் மலைக்கு ஓரமாக உள்ள தடாகத்தை ஆம்பல் நதி என்பர். இத்தடாகத்தை கச்சியப்ப சிவாச்சாரியார் தம் புராணத்தில் ஆம்பல் நதி என குறிப்பிட்டுள்ளார் நீர் வற்றாத வள்ளிசுனை என்ற நீர் ஊற்று ஒன்றும் இங்கே உண்டு.

இக்கோவில் வளாகத்தினுள் ஒரு அழகிய தெப்பம் உள்ளது இதனைக் குமாரத் தெப்பம் என்றழைப்பர். இக்குளத்தின் நான்கு பக்கமும் அடிக்கற்களால் வெகு அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இது கருங்கல் மலைப்பாறைக்கு அருகில் கண்களைக் கவரும் தன்மையில் அமைந்துள்ளது. இக்குளத்திலுள்ள நீரைக் குடிப்பதற்கும் நோய் நீக்கத்திற்கும் இவ்வூரில் வசிக்கும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். தண்ணீர் குடிக்க இனிய சுவையுடன் கூடியதாக இருக்கிறது. இதன் தரையில் அப்ரேக் போன்ற உலோகப்பொருள் காணப்படுகிறது. இத் தண்ணீர் இவ்வுலோகத்தினால் கெட்டுப்போவதில்லை. உடலுக்கு நன்மை செய்கிறது.

செவிவழிச் செய்தி:

அதிமதுரபாண்டியன் என்ற ஒரு அரசன் வெகுகாலத்திற்கு முன் பழங்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். இம் மன்னுடைய அரண்மனைக்குச் சுமார் ஒரு கல் தூரத்தில் உவணவனம் என்று ஒரு காடு இருந்தது. இக்காட்டில் ஒரு மலை 300 அடி உயரத்தில் கம்பீரமாகக் காட்சியளித்து வந்தது. இம்மலையை உவணகிரி (உ்வணம்: கழுகு, கிரி: மலை) என்றழைப்பர். ஒரு நாள் அதிமதுரபாண்டின் வேட்டையாடி களைப்புற்று உவண வனத்திலுள்ள மலையின் அடிவாரத்தில் ஒரு வேங்கைமரத்தடியில் தங்கி இளைப்பாறினான். அப்பொழுது அங்கு அவன் ஒரு அதிசியங்கண்டான்.

ஒரு பசு தானாகவே ஒரு பாறையின் மேல் பால் சுரப்பதைக் கண்டான் பசு பால் சுரப்பதை கவனித்துக் கொண்டிருக்கையிவ் பூசை நடக்கும் பொழுது ஏற்படும் ம்ணியோசை போல் மணியோசையும் அவ்ன் காதில் விழுந்தது. மன்னன் வியப்புற்றான் சுற்றும்முற்றும் பார்த்தான் பின்னர் பசு பால் சுரந்தபாறையை அடைந்தான். உற்று நோக்கினான். பசு அரசன் வருகை கண்டதும் மருண்டு ஓட ஆரம்பித்து பூசை மணியின் ஒசையும் குறைந்தது.

மன்னர் தன் ஊர் திரும்பினான் அன்று இரவேமுருகன் இரண்டு அடியார்கள் கனவில் தோன்றி அவ்விருவரையும் உடனே சென்று மன்னனைக் கண்டு பசு பால் சுரந்த பாறை அமைக்கும் இடத்தில் தனக்கு ஒரு அழகான ஆலயம் அமைக்கும் படியும் இச் செய்தியை வேந்தனிடம் நேரில் சொல்லுமாறும் கட்டளையிட்டு மறைந்தான்.

இறைவனின் கட்டளைப்படி அவ்விரு அடியார்களும் மன்னனை சந்தித்துச் செய்தியை முற்றும் விளம்பினர்.

இச்செய்தியைப் கேட்ட அரசன் காலம் தாழ்த்தாது உடனே தனது பரிவாரங்கள் சூழ பசு பால் சுரந்த பாறைக்கு விரைந்து போய் பாறையைப் பெயர்த்துப் பார்த்தான் அப்பாறையில் ஒரு குகையும் அக்குகையினுள் மயில்வாகனத்தில் அமர்ந்த முருகன் சிலையும் கண்டான். நெஞ்சார வாழ்த்தி வனத்தைத் திருத்தி முருகனுக்கு நல்லமுறையில் கோயில் ஒன்று அமைத்தும் ஊரைத்திருத்தியும் உவனவனம் என்ற பெயரைக் கழுகுமலை என மாற்றி அமைத்தான். இது ஊர் தோன்றிய வரலாறு பற்றி செவிவழியாக (கர்ணபரம்பரையாக) கேட்ட செய்தி.

மதுரையை ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கர் அய்யனால் எட்டிடயபுரம் மன்னருக்கு கழுகுமலைச் சீமை வழங்கப்பட்டது. அன்னாள் முதல் இன்னால் வரை எட்டையபுரம் மன்னர்கள் பரம்பரையாக இத்திருக்கோவிலின் திருப்பணிகளை செய்து வருகிறார்கள் இக்கோவிலின் மஹா மண்டபங்கள் ஆறுமுக நயினாருக்கு கருவறை, பள்ளியறை வெள்ளியில் மிகுந்த வேலைப்பாடுகள் அமைந்த யானை குதிரை, அன்னம், மயில், கைலாசபர்வதம் முதலிய வாகனங்களும் யானைத்தந்தத்தில் பல்லக்குகளும் மிகவும் விலை உயர்ந்த நவரத்தின ஆபரணங்களும் எட்டையபுரம் மன்னர்களால் செய்துவைக்கப்பட்டன.

பூசைகளும் திருவிழாக்களும்:

ஒவ்வொரு நாளும் 5 கால பூசை நடைபெற்று வருகிறது. காலை 5.30 மணிக்கு நடைதிறந்தவுடன் திருவனத்தில், காலை 8.30 மணிக்கு விளா பூசை, பகல் 12.15 உச்சிகால பூசை, மாலை 6.00 மணிக்கு சாயரச்சை பூசை, இரவு 8.30 மணிக்கு அர்தசாமப் பூசை அதனைத் தொடர்ந்து பள்ளியறை பூசை ஆகிய 5 கால பூசைகள் நடைபெற்று வருகின்றன.

தைப்பூசம் பங்குனி உத்திரம் ஆகிய இரண்டு பிரமோத்சவ உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. தைப்பூசத் திருநாளில் பூச நட்சத்திரத்தில் சிறிய தேர் (சட்டத்தேர்) வலம் வரும் தேர்த் திருவிழாவும் பங்குனி உத்திரத் திருவிழாவில் பூர நட்சத்திரத்தில் வைரத்தேர் வலம் வரும் தேர்திருவிழாவும் நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு திருவிழாக்களோடு கந்தசஷ்டி திருக்கார்த்திகை வைகாசி விசாகம் போன்ற திருவிழாக்கள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இத்திருக்கோவிலில் முழுமையான திருப்பணிகள் அனைத்தும் நல்ல முறையில் செய்யப்பட்டு 23.1.1994 - ல் அஷ்டபந்தன ஜீர்னேத்தாரண கும்பாபிஷேகம் (குடமுழுக்கு விழா) சிறப்பாக நடைபெற்றது. இத்திருக்கோவிலின் பங்குனி உத்திர வைரத்தேரின் மரச் சக்கரங்களை மாற்றி புதிதாக இரும்பு சக்கரங்கள் பெல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு தேருக்குப் பெருத்தல் பெற்று 1996-ம் வருடம். தேர்த்திருப்பணி நிறைவு பெற்று புதிய சங்கரங்களுடன் .... ஆம் நாள் தேர்த்திருவிழா நடைபெற்றது. தற்போது புதுல்பொலிவுடன் தேர்த்திருவிழா நடைபெற்று வருகிறது. இவ்வட்டாரத்தில் வாழும் மக்கள் யாவரும் முருகனைத் தவறாது வழிபட்டு காணிக்கை செலுத்தி வருகின்றனர். கழகுமலை கந்தனைக் காணாத கண்கள் என்ன கண்கள். என்பது இப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் கருத்து ஆகும்.

இப்புராதனதலம் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதராலும், சங்கீத மும்மணிகளில் ஒருவராகிய முத்துசுவாமி தீட்சிதர் அவர்களாலும், கவின்மிகு காவடிச்சிந்து பாடிய. சென்னிகுளம் புலவர் அண்ணாமலை ரெட்டியாராலும் கழுகுமலை பிள்ளைத் தமிழ் பாடிய சிதம்பரக்காவிராயராலும் தேசிய மகாகவி சுப்பிரமணி பாரதியாராலும், முகவூர் மீனாட்சி சுந்தரக்காவிராயராலும், மு.ரா. கந்தசாமிக் கவிராயராலும், தமிழ்நாடு சித்த வைத்திய சங்க அமைச்சருமான சுவாமி விருதை சிவஞான யோகிகள் அவர்களாலும், நாடக உலகில் புகழ் பெற்ற எம். ஆர். கோவிந்தசாமி அவர்களாலும் ஏனைய புலவர்களும் புகழ்பட்ட திருத்தலமாகும்.

பக்தர்களின் பார்வைக்காக திருப்புகழில் இருந்து சில பாடல்களும், காவடிச்சிந்தில் சில பாடல்களும் இத்துடன் அச்சிடப்பட்டுள்ளன.

1. முலையை மறைத்து திறப்பார் ஆடையை
நெகிழ உடுத்திப்படுப்பார் - வாயிதழ்
முறை முறை முத்திக்கொடுப்பர் - பூமலரணை மீதே
அலைகுலைய தொட்டணைப்பர் - மால்
பொரிதவர் பொருளைக் கைப்பறிப்பர் - வேசைகள்
உறவாமே
தலைமுடி பத்து தறித்த ராவணன்
உடல் துளைபட்டுத் துடிக்கவே
ஒரு தனுவை வளைத்து தொடுத்த வாளியின்
மருகோனே
கலைமதி அப்புத் தரித்த வேணியர்
உதவிய வெற்றித் திருக்கை வேலவா
கழுகுமலைக்குட் சிறக்க மேவிய பெருமானே

(திருப்புகழ்)

2. கோங்க முலையுமெலிய வீங்கு புளக களப
மேந்து குவடு குழையும்படி காதல்
கூர்ந்து குழையை அமலி தோய்ந்து குலவுமினிய
தேங்கு கலவி அமுதுண்டு இயல் மாதர்
வாங்கு பகழி வழியை மோந்து பகலுமிரவும்
வாய்ந்து துயிலை மிகவும் - தணியாத
வாஞ்சனையுடைய அடிமை நீண்ட பிறவி அலைய
நீந்தி அமல அடிவந்தடைவேனா.

ஓங்கலலைய பெரிய சோங்கு தகர மகர
மோங்குநதியின் முழுகும் - பொருக்குரும்
ஒய்ந்து பிரமன் வெருவ வாய்ந்த குருமலையில்
ஊர்ந்து மயிலதுலவுந் - தனிவேலா
வேங்கை அடவி மறவர் ஏங்க வனிதை உருக
வேங்கை வடிவு மருவுங் - குமரேசா
வேண்டு மடியர் புலவர் மேண்ட அரிய பொருளை
வேண்டு மளவிலுதவும் - பெருமாளே

(திருப்புகழ்)

1 தெள்ளுதமிழ்க் குதவுசீலன் துதி
செப்பு மண்ணுறை மலைக்கனு கூலன் வளர்
செழியப் புகழ் விளைந்த கழுகுமலை வளத்தை
தேனே சொல்லு வேனே
வெள்ளிமலை யொத்த பலமேடை முடி
மீதினிலே கட்டுக் கொடி யாடை யற்ற
லெய்ய வனடத்தி வருதுய்ய மிரதப்பரியும்
விலகும்படி இலகும்
வீதி தொறு மாதி மறை வேதம் சில
வேதியர் களோது சாமகீதம் அதை
மின்னு மலர்க்காவதனில் துன்னுமடல் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்

2. சென்னிகுள நகர்வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செக மெச்சிய மதுரக்கவி யதனைப் புயவரையிற் புனை
தீரன் அயில் வீரன்
வண்ண மயில் முருகேசன் குற
வள்ளி பதம்பணி நேசன் உயர்
வரமேதரு கழுகாசலபதி கோவிலின் வளநான் மற
வாதே சொல்வேன் மாதே. [காவடிச்சிந்து]

சுபம்

முருகன் துணை

ஸ்ரீ மாருதி பிரிண்டர்ஸ், கழுகுமலை.